# பதிவுசெய்து, வாக்களிக்கத் தயாராகுங்கள்.



ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

## வாக்களிக்க, ஏன் பதிவுசெய்ய வேண்டும்?

நீங்கள் வாக்களிக்கப் பதிவுசெய்திருந்தால், பொதுத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புகளில் பங்குபெறலாம். நீங்கள் அக்கறை கொள்ளும் பிரச்சினைகளில் யாரைப் பி ரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள் என்பது பற்றிக் கூறுவதற்கான வாய்ப்பு தேர்தல்கள்.

**பதிவுசெய்து, வாக்களிப்பதன் மூலம் உங்கள் உரிமையை நீங்கள் நிலைநாட்டலாம்.**

## வாக்களிக்க யார் பதிவுசெய்யலாம்?

நீங்கள் பின்வரும் தகுதியுடன் இருந்தால், *கண்டிப்பாகப்* பதிவுசெய்ய வேண்டும்:

- **உங்களுக்கு 18 அல்லது அதற்குமேற்பட்ட வயது, மேலும்**
- **நியூசிலாந்து குடிமகன் அல்லது நியூசிலாந்தின் நிரந்தரக் குடியிருப்பாளர் மற்றும்**
- **தங்கள் வாழ்வில் தொடர்ந்து ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் நியூசிலாந்தில் வசித்திருக்க வேண்டும்.**

நீங்கள் கூக் ஐலேண்ட் மாவோரி, நியூயியன் அல்லது டோக்கெலாவைச் சேர்ந்தவர் என்றால், நியூசிலாந்தில் தொடர்ச்சியாக 12 மாதங்கள் வசித்திருந்தால் மட்டுமே பதிவுசெய்து கொள்ளலாம்.

நீங்கள் வெளிநாட்டில் வசிப்பவராக இருந்தால், பின்வரும் தகுதிகள் இருக்குமாயின் வாக்களிக்கப் பதிவு செய்யலாம்:

- **கடந்த மூன்று ஆண்டுகளாக நியூசிலாந்தில் வசிக்கும் நியூசிலாந்து குடிமகனாக இருந்தால் அல்லது**
- **கடந்த பன்னிரெண்டு மாதங்களாக நியூசிலாந்தில் வசிக்கும் நிரந்தர நியூசிலாந்து குடிமகனாக இருந்தால்.**

நீங்கள் 17 வயதை அடைந்தவுடன் பதிவு செய்யலாம். 18 வயது அடைந்ததும் நீங்கள் தானாகவே பதிவுசெய்யப்பட்டு, வாக்களிக்கத் தயாராவீர்கள்.

## நான் எவ்வாறு பதிவுசெய்வது?

உங்கள் விவரங்களைப் பதிவு செய்வது அல்லது புதுப்பிப்பது எளிது. நீங்கள்:

- **vote.nz** ஐப் பார்வையிட்டு, ஆன்லைனில் சேர உங்கள் நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்து பாஸ்போர்ட் அல்லது RealMe ஆல் சரிபார்க்கப்பட்ட அடையாளத்தைப் பயன்படுத்தவும்
- இலவசமாக **0800 36 76 56** என்ற எண்ணை அழைத்து, உங்களுக்கு ஒரு படிவத்தை அனுப்பக் கோரவும்

நீங்கள் பதிவுசெய்ததும், உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேரும். வாக்களிப்பதற்கு நீங்கள் கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும் வீட்டை மாற்றும் போது உங்கள் விவரங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

## நீங்கள் மாவோரியாக இருந்தால், வாக்களிக்கப் பதிவுசெய்தல்

மாவோரி வம்சாவளியைச் சேர்ந்தவராகவும், முதன்முறையாகப் பதிவுசெய்பவராகவும் இருந்தால், உங்களுக்காக ஒரு முக்கியமான தெரிவு உள்ளது. நீங்கள் எந்த வாக்காளர் பட்டியலில் இருக்க விரும்புகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்: பொதுப் பட்டியல் அல்லது மாவோரி பட்டியல்.

பொதுத் தேர்தலில் எந்தத் தொகுதியில் வாக்களிக்கப் போகிறீர்கள் என்பதை உங்கள் தேர்வு தீர்மானிக்கிறது.

நீங்கள் பொது வாக்காளர் பட்டியலைத் தேர்ந்தெடுத்தால், பொது வாக்காளர் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் மாவோரி வாக்காளர் பட்டியலைத் தேர்ந்தெடுத்தால், மாவோரி வாக்காளர் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள். எந்தப் பட்டியலில் இருந்தாலும், ஒரே அரசியல் கட்சிகளின் பட்டியலுக்கு நீங்கள் வாக்களிக்கலாம்.

நீங்கள் தேர்வுசெய்யும் பதிவானது, உள்ளூர்த் தேர்தல்களில் நீங்கள் வாக்களிக்கும் முறையை நிர்ணயிக்கும். மாவோரி பட்டியலில் நீங்கள் இருந்து, உங்கள் உள்ளூர் அதிகாரி மாவோரி வார்டு அல்லது தொகுதியில் இருந்தால், மாவோரி வார்டில் உள்ள பிரதிநிதிக்கு வாக்களிப்பீர்கள்.

நீங்கள் ஒரு பட்டியலைத் (மாவோரி அல்லது பொது) தேர்ந்தெடுத்தவுடன் உங்கள் எண்ணத்தை மாற்றினால், ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் ஒரு முறை நடைபெறும் மாவோரி தேர்தல் விருப்பத்தின் போது உங்கள் பட்டியலை மாற்றிக்கொள்ளலாம்.

## பதிவு செய்ய உதவி தேவையா?

சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்ய அல்லது உங்களுக்காக உங்கள் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு உதவ, நண்பர் அல்லது குடும்பத்தினர் போன்ற உங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் நீங்கள் கேட்கலாம், அல்லது உங்கள் உள்ளூர் வாக்காளர் பதிவாளரைக் கேட்கலாம்.

நீங்கள் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

உடல் அல்லது மனநலக் கோளாறு காரணமாக, தங்கள் சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து கையொப்பமிட இயலாத ஒருவரை அறிந்தால், நீங்கள் உதவலாம்.

வாக்களிக்கப் பதிவுசெய்ய ஒருவருக்கு எவ்வாறு உதவுவது என்பதைப் பற்றி மேலும் அறிய **vote.nz** ஐப் பார்வையிடவும்.

## உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு பற்றிக் கவலையா?

உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு அல்லது உங்கள் குடும்பத்தின் பாதுகாப்புக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், ரகசியமான வெளியிடப்படாத பட்டியலுக்குச் செல்ல நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் சேர்க்கை விவரங்களை நாங்கள் பாதுகாப்பாக வைத்திருப்போம், அவற்றை யாருக்கும் கொடுக்க மாட்டோம்.

கூடுதல் தகவலுக்கும், விண்ணப்பப் படிவத்துக்கும் உங்கள் உள்ளூர் வாக்காளர் பதிவாளருடன் பேசுங்கள், **vote.nz** என்ற வலைத்தளத்துக்குச் செல்லுங்கள் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழையுங்கள்.

## மேலும் தகவல் தேவைப்படுகிறதா?

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் பற்றிய மேலும் தகவலுக்கு:

- **vote.nz** ஐப் பாருங்கள்
- **facebook.com/VoteNZ** ஐப் பாருங்கள்

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் பற்றிய தகவலானது 27 மொழிகளில் **vote.nz** இல் கிடைக்கிறது.

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI